

சேலம் மாவட்டத்தில். கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்ததினத்தையொட்டி மாவட்ட உதயநிதி நற்பணி மன்றத்தின் சார்பில் 250 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட பொதுச்செயலாளர். பி.கே.பாபு, மாவட்ட தலைவர் மாமன்ற உறுப்பினர். ராஜ்குமார் முன்னிலையில் வளைகாப்பு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். உடன் மன்ற நிர்வாகிகள் செயலாளர் தர்மராஜ், பொருளாளர் நடராஜன், நிர்வாகிகள் சூர்யா, பூபதி, விஜி, மேகா, அருண், சீனிவாசன் ஆகியோர் இருந்தனர்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியின்,நெடுவாக்கோட்டைமேலவாசல்காஞ்சிக்குடிக்காடுபேரையூர் ஒவேல்குடிகருவாக்குறிச்சிமுக்குளம் சாத்தனூர் மற்றும் நல்லிக்கோட்டை கிராம மக்களின் நலன்காக்க புதிய பேருந்தை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா கொடியசைத்து துவக்கிவைத்து பேருந்தில் பயணம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் ஒன்றியக் கழக செயலாளர் நா.கவியரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு,மாவட்ட பிரதிநிதி கருணாநிதி மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### டிச.2–ல் திராவிடர் கழகத் தலைவர்

# கி.வீரமணி 93-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – நீதியரசர் ஏ.கே.ராஜன் – கவிப்பேரரசு வைரமுத்து பங்கேற்கின்றனர்!

*சென்னை, நவ.27-*

தந்தை பெரியார், அன்னை மணியம்மையார் மறைவிற்குப் பிறகு, இயக்கத்தை வலிமையோடு வழிநடத்தியும், நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிகாட்டியாகவும், சமூகநீதித் தடத்தில் தனி முத்திரை பொறித்தும், தந்தை பெரியார்தம் வாழ்வியல் கொள்கை நெறியை உலகளாவிய அளவில் கொண்டு சென்றும். 92 ஆம் அகவையிலும் பம்பரம் போல் சுற்றிச் சுழன்றும் 93 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா வரும் டிசம்பர் 2 ஆம் தேதி காலை முதல் இரவு வரை பல்வேறு அம்சங்களுடனும், சீரும் சிறப்புமாக சென்னை பெரியார் திடலில் நடைபெறவிருக்கிறது.

**கவிச்சுடர் கவிதைப் பித்தன் தலைமையில் கவியரங்கம்!**

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கொள்கை உரை நிகழ்த்துவார்.

மதிய விருந்துக்குப் பிறகு 2.30 மணிமுதல் 5 மணிவரை பட்டிமன்றம், கவியரங்கம், 'மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிகள் நடை பெறும்.

கழகப் பிரச்சார செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி தலைமையில் பட்டிமன்றமும், கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் கவியரங்கமும் நடைபெறும்.

மாலை 5 மணிக்குத் "தலைமுறை இடைவெளியின்றி" என்ற பொதுத் தலைப்பின்கீழ் கருத்தரங்கம் நடைபெறும். சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், ஊடகவியலாளர்கள் ஜீவசகாப்தன், இந்திரகுமார் தேரடி, திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்குரைஞர் சே.மெ.மதிவதினி, பெரியார் பிஞ்சு சித்தார்த் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுவர்.

**நூல் வெளியீடு - வாழ்த்தரங்கம்**

திராவிடர் கழக பொதுச்செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் வரவேற்புரை வழங்க, கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் தலைமையில் நூல் வெளியீட்டு விழாவும், வாழ்த்துரையும் தொடரும்.

கவிப்பேரரசு வைரமுத்து, சென்னை உயர்நீதி மன்ற மேனாள் நீதிபதி டாக்டர் ஏ.கே.ராஜன் ஆகியோர் நூல்களை வெளி யிட்டு உரையாற்றுவர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன் அய்.ஏ.எஸ். வாழ்த்துரை வழங்குவார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஏற்புரை நிகழ்த்துவார்.

### மீன்வளம்: ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டம்!

# திருச்சி - காவிரி கரையில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு!

## அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

*திருச்சி, நவ. 27-*

தமிழ்நாடு அரசு 23.11.2025 அன்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் வாயிலாக பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2025-26ம் ஆண்டிற்கு ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்தல் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் காவேரி ஆற்றில் 60,000 எண்ணிக்கையிலான மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்யப் பட்டது.



மேலும், இத்திட்டமானது நாட்டின் மீன் வகைகளான சேல் கெண்டை. கல்பாக, இந்திய பெருங் கெண்டை மீன் வகைகளான கட்லா, ரோகு மற்றும் மிர்கால் ஆகியவற்றின் சினைமீன்கள் ஆறுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தஞ்சாவூர் மாவட்டம் கரந்தை அரசு மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையில் தூண்டுதல் முறையில் பெருவிரலிகளாக வளர்க்கப்பட்டு 60,000 எண்ணிக்கையிலான மீன்குஞ்சு பெருவிரலிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவேரி ஆற்றில் இருப்பு செய்யப் பட்டது. மீன்குஞ்சு கள் உற்பத்தி செய்யப்பட்டு, அம்மீன்குஞ்சுகள்

ஆறுகளில் உள்நாட்டு மீன்வளத்தினை பெருக்கிடவும், அழிந்து வரும் நாட்டின மீன் இனங்களை பாதுகாத்திடவும், ஆறுகளின் நிலைத்த வளம் குன்றா மீன்வளத்தை , (*Sustainable Stock Maintenance of Native Fish Species in River System*) ஆற்று மீன்பிடிப்பினை நம்பியுள்ள உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும் பயன்படுகிறது.

இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர் தங்கலட்சுமி திருச்சி (மண்டல) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர், உதவி இயக்குநர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, திருச்சி மற்றும் கரூர் (இருப்பு) திருச்சி, இதர அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள், கிராம பிரதிநிதிகள் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# நவ.27ஆம் தேதி இளைஞர் எழுச்சி நாள் விழா!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

*பெரம்பலூர், நவ.27-*



பெரம்பலூர் மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவோம் என பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒற்றை செங்கலால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்தவர். தமிழக துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் கிராமம், கிராமமாகச் சென்று தேர்தல் பணியாற்றியும் கழக நிகழ்ச்சிகள், கழகத்தினர் இல்ல நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து உழைப்பால் உயர்ந்த சின்னவர் அவர்களின் பிறந்த நாள் இன்று (27.11.2025) நலத்திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள் முதியோர்களுக்கு புத்தாடை உணவு வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும், பொதுமக்களுக்கு மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம் நடத்திட வேண்டும். இந்த பிறந்தநாள் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு கழக நிர்வாகிகள் செய்ய வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம் பைத்தூர் ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் படிவம் நிரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்காளர்களிடம் பெறப்பட்ட படிவத்தை பதிவேற்றும் பணிகளை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தே.மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர் இரா. வரதராஜன், ஏ.ஏ.ஆறுமுகம், ரவி, சந்திரமோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூரில் தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணியினை(SIR) ஆத்தூர் தொகுதி பொறுப்பாளர் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வீடு வீடாக சென்று ஆய்வு செய்தார். உடன் ஆத்தூர் தெற்கு நகர கழக செயலாளர் ஏ.ஜி. இராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### புதுக்கோட்டையில் இளைஞர் எழுச்சி நாள்!

புதுக்கோட்டை, நவ. 27–

துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில், மாவட்ட அமைப்பாளர் மாமன்ற உறுப்பினர் திருமதி செந்தாமரை பாலு ஏற்பாட்டில்,

புதுக்கோட்டை மச்சுவாடியில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்களுக்கு இன்று (27.11.2025) காலை 11மணியளவில் உணவு மற்றும் போர்வைகள் வழங்கப்படுகிறது.

மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறும் விழாவில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதிசெந்தில் ஆகியோர் உணவு மற்றும் போர்வைகள் வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

நிகழ்வில் மாநில மாவட்ட மாநகர நிர்வாகிகள், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.


